# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2032/32 - 2017 අගෝස්තු මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.08.17

*2032/32 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2017, ஓகத்து மாதம் 16ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மைத்திரிபால சிறிசேன,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2017, ஓகத்து 16.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் (இல.17) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 4 மற்றும் 5 ஆகிய விடயங்களை நீக்குவதன் மூலம் ;

(ஆ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டம்" என்பதை நீக்குவதன் மூலம் ;

(2) அவ்வறிவித்தலில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் (இல.8) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 33 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் :
"34 தேசிய லொத்தர் சபை
35 அபிவிருத்தி லொத்தர் சபை"

(ஆ) அதன் நிரல் III இல் "(2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) தகவல் அறியும் உரிமைகள் பற்றிய சட்டம்" என்பதற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் :

"(1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டம்".

8- 1102


1A - G 26086 — 382 (2017/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.